


சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்த்திகேயன், தொகுதி பார்வையாளர்கள் இ.ஜி. சுகவனம், டாக்டர் விவேக் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், டிஜிட்டல் ஏஜன்ட்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தியாகதுருகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் கொட்டையூர் கிளைக் கழக செயலாளர் முனுசாமி ஆகியோர்களின் ஏற்பாட்டில்,கொட்டையூர் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., கழக இரு வண்ண வேஷ்டிகள் மற்றும் புடவைகளை வழங்கி, தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

### அமெரிக்காவில் பணிபுரியும்

# இந்தியர்களின் ‘எச்1பி’ விசா பிரச்சினை தீர்க்கப்படுமா?

## மக்களவையில் — டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஏப்.1-

அமெரிக்கா இந்தியக் குடிமக்கள் அமெரிக்காவில் பணிபுரியத் தேவையான எச்1பி விசா வழங்குவது தொடர்பான கடுமையான நடைமுறை சிரமங்கள் தீர்க்க இந்திய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அவரது கேள்விகள் வருமாறு:-

இந்தியக் குடிமக்கள் அமெரிக்காவில் பணிபுரியத் தேவையான எச்1பி விசா வழங்குவதற்கு அமெரிக்கா எடுத்த கடுமையான நடவடிக்கைகளால் ஏராளமான இந்திய ஆர்வலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒன்றிய அரசு தீவிரமாக தனது கவனத்தில் எடுத்ததா? அப்படியானால், அதன் விவரங்கள் தெரிவிக்க?

எச்1பி விசா பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான, இணக்கமான தீர்வைக் காண வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியை எடுக்க இந்திய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத இன்னல்கள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு இந்திய அரசின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

இந்திய குடிமக்கள் எதிர்கொள்ளும் H1B விசா தொடர்பான சவால்களை இந்திய ஒன்றிய அரசாங்கம் அறிந்திருக்கிறது. விசா தொடர்பான கொள்கைகள் மற்றும் தொடர்புடைய முடிவுகள் இறையாண்மை சார்ந்த விஷயங்கள். ஒவ்வொரு விசா நடவடிக்கை முடிவும் ஒரு தேசிய பாதுகாப்பு முடிவு என்றும், அமெரிக்க விசா என்பது ஒரு சிறப்புரிமை அன்றி உரிமை அல்ல என்பதும் அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாடா கும்.

டிசம்பர் 2025 இல், அமெரிக்க வெளியுறவுத்துறை அனைத்து H1B விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் (H4) அமெரிக்காவில் அனுமதிக்கப்படுவதைத் தீர்மானிக்க ஆன்லைன் இருப்பை சரிபார்ப்பதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து, 2025 டிசம்பரில் திட்டமிடப்பட்டிருந்த பல H1B மற்றும் H4 விசா விண்ணப்பதாரர்களின் தூதரக சந்திப்புகள் 2026 இல் புதிய தேதிகளுக்கு மாற்றியமைக்கப்பட்டது, இதனால் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்தியாவில் தங்கியுள்ளனர்.

தொழில்நுட்ப முன்னேற்றம், புதுமை, பொருளாதாரம் ஆகியவற்றை ஊக்குவிப்பதில் திறமையான இயக்கம் நீண்ட காலமாக குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது என்று இந்தியா நம்புகிறது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இரண்டிலும் வளர்ச்சி, மற்றும் செல்வ உருவாக்கம். இரு நாடுகளிலும் உள்ள பங்குதாரர்கள் சட்டப்பூர்வ நகர்வுக்கான தொடர்ச்சியான ஆதரவை எளிதாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு இந்திய ஒன்றிய அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுடன் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இந்தியப் பிரஜைகள் நேரில் வருகைகள், மின்னஞ்சல், 24x7 அவசரகால ஹெல்ப் லைன்கள், WhatsApp, MADAD, CPGRAMS மற்றும் eMigrate போன்ற குறைகளைத் தீர்க்கும் போர்டல்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் மூலம் இந்திய தூதரகங்கள் மற்றும் இடுகைகளை அணுகலாம். இந்திய சமூக நல நிதியம் (ICWF) மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட துன்பத்தில் உள்ள இந்திய குடிமக்களுக்கு உதவி வழங்கவும் பயன்படுத்தப்படுகிறது, மேலும் தேவையான இடங்களில் சட்ட உதவிகளை வழங்குவதும் அடங்கும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் வார்டு செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆனந்தி சரவணன், ராஜா, ராமலிங்கம், கௌரி அன்பழகன், நகர மன்ற உறுப்பினர்கள் அருள், ரமேஷ் கலைவாணி, மதியழகன், மோகன், ராஜி, விஸ்வநாதன், ஏழுமலை, சம்பத், டி.ஆர்.ராஜு, வேணு, கீரை ஆறுமுகம், சங்கர், லட்சுமணன் தாகா அன்பரசு, ராஜா ,முருகன், செல்வகுமார், கணபதி, ரங்கநாதன், கதிரேசன், மூர்த்தி அப்துல் ஹமீத், செல்வம், சுரேஷ், கிருஷ்ணமூர்த்தி, மகா, சேகர், குணா, பாலமுருகன், அருண் பிரபாகரன், பாலச்சந்தர், மோகன், கோபி, பிரபு வினோத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் — அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

சென்னை, ஏப்.1-

கழக தலைவர் -முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி - கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி - மாவட்ட கழக செயலாளர் - தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களின் தலைமையில் கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் செயல் வீரர்கள் கூட்டம் இன்று (01-04-2026 (புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் திட்டக்குடி அஞ்சுகம் இராமலிங்கம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



அதுசமயம் திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி கழக மாவட்ட நிர்வாகிகள்- தலைமை செயற்குழு- பொதுகுழு உறுப்பினர்கள்- ஒன்றிய- நகர- பேரூர்- கிளை- வார்டு கழக செயலாளர்கள்- நிர்வாகிகள் மாவட்ட- ஒன்றிய - நகர - பேரூர் - அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்

மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட செயலாளர்கள் - வட்டார- பகுதி- ஒன்றிய - நகர- பேரூர் - வார்டு - கிளை கழக தலைவர் - செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபா.இராஜேந்திரனுக்கு ஜனநாயக முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் மற்றும் கழக நிர்வாகிகள் மாபெரும் வரவேற்பு அளித்தனர். நெய்வேலி நகரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலை, பேரறிஞர் அண்ணா சிலை, முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை, டாக்டர் அம்பேத்கர் சிலை உள்ளிட்ட தலைவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேனி தெற்கு மாவட்டம் அயலக அணி மாவட்ட அமைப்பாளர்

# வி.ஆர்.ராஜன் மாமியார் பார்வதி மறைவு!

தேனி, ஏப்.1-

தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச்செயலாளரும், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி அமைப்பாளரும், வினோரா பவுண்டேஷன் நிறுவனருமான வி.ஆர்.ராஜனின் மாமியாரும், தேனி லட்சுமிபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி ஆசிரியை ரேணுகா அவர்களின் தாயாருமான பார்வதி அவர்கள் நேற்று (31.3.2026) இயற்கை எய்தினார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரது மறைவிற்குப் பல்வேறு தரப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், நகர, செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், கழக முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சாத்தூர் பாலகிருஷ்ணன்

### ஏப்ரல் 1 (1976)



சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.


“சாத்தூர் பாலகிருஷ்ணன் — அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!” என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எம். கண்ணபிரான்

### ஏப்ரல் 1 (1975)



பள்ளிப்படிப்பின்போதே தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். திராவிடர் கழகத்தில் வண்ணைப் பகுதியில் முக்கிய செயல்வீரராக செயல்பட்டவர்.

தி.மு.க. துவங்கியதும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். திரு. என்.வி. நடராசன் அவர்கள் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது இவர் மாவட்டத் துணைச் செயலாளராக பணியாற்றியவர். பின்னர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

கழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய போராட்டமான மும்முனைப் போராட்ட காலத்தில் தலைநகர் சென்னையின் மாவட்டச் செயலாளராக இவர் ஆற்றிய பணிகள் மும்முனைப் போராட்டத்தைப் போலவே முக்காலமும் மறையாத அற்புதத் தொண்டாகும்.

தந்தை பெரியார் அவர்களிடமும், பேரறிஞர் அண்ணா அவர்களிடமும் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களிடமும் அன்பு கொண்டவர்.

“கழகம்! கழகம்!! அது ஒன்றே அவரது உயிர் மூச்சோடு சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது” என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்பு கடிதத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.